# III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.29/2013

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 13-12-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான் வெஸ்லி | Village | : |
| Father's Name | : வேதநாயகம் | Calling | : |
| Age | : | Taluk | : |

**<u>இரண்டவாது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கை நான் என்னை ஏமாற்றியதால் நான் போட்டுள்ளேன். தாவா சொத்தினுடைய விஸ்தீரணம் 7085 சதுரடி.தாவா சொத்து ஆதியில் எனது தாயார் லீலாவதிக்கு சொந்தமானது. எனது தாயார் எனக்கு தாவா சொத்தை எழுதி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. எனது தாயார் இறந்துவிட்டதால் தாவா சொத்து எனக்கும் எனது மூத்த சகோதரி கிரிஸ்டிபெல்லுக்கும் வந்துள்ளது. தாவா சொத்தில் சாலையை நோக்கி 4 கடைகளும், அதன் உள்ளே 17 வீடுகளும் இருந்தது. 40 வருடமாக மேற்கூறிய வீடுகளும் கடைகளும் இருந்தது. தற்போது தாவா சொத்தில் எத்தனை வீடுகள் மற்றும் கடைகள் உள்ளது என்பது எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் இவ்வழக்கின் வழக்குரையில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதா என்றால் .....(இதற்கு சாட்சி பதில் சொல்லாமல் மௌனமாக இருக்கிறார்.).

(வாதி/சாட்சியின் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.).